கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 24.07.2023
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இந்திய அறிவியல் கண்ணாடி வடிவமைப்பாளர்கள் சங்கம் இணைந்து 20வது தேசிய கருத்தரங்கம்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இயற்கை வள மேம்பாட்டு இயக்ககத்தின் மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை மற்றும் இந்திய அறிவியல் கண்ணாடி வடிவமைப்பாளர்கள் சங்கம் இணைந்து “உலோக முத்திரைகளை கண்ணாடியில் பதிப்பது என்ற செயலமர்வையும், வேளாண் ஆராய்ச்சி சார்ந்த ஆய்வகக் கண்ணாடிகளை வடிவமைப்பதில் அறிவியல் வழி கண்ணாடி வடிவமைப்பதின் பங்கு” என்ற 20வது தேசிய கருத்தரங்கத்தையும் ஜுலை 21 முதல் 23 வரை நடத்தினர். இதில் இந்திய அறிவியல் கண்ணாடி வடிமைப்பாளார்கள் சங்க உறுப்பினர்கள் 70 நபர்களும், 21 தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மண்ணியல் துறை விஞ்ஞானிகளும் பங்கேற்றனர். ஜுலை 21, 2023 அன்று கண்ணாடி வடிவமைத்தல் போட்டியில், கொடுக்கப்பட்ட கண்ணாடியிலிருந்து“ யுனிவர்சல் ஃபில்டர்பம்ப்” என்ற கருப்பொருளை செய்வதற்கு 13 உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் வெ. கீதாலட்சுமி அவர்கள், கருத்தரங்கை தொடங்கி வைத்து தொடக்க உரையாற்றி, செயல் அமர்வு மற்றும் தேசிய கருத்தரங்கின் அறிவியல் புத்தகத்தை வெளியிட்டார். முன்னதாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மண்ணியல் மற்றும் வேளாண் வேதியில் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் அர.சாந்தி அவர்கள் வரவேற்புரையாற்றினார். இந்திய அறிவியல் கண்ணாடி வடிமைப்பாளார்கள் சங்கத்தின் தலைவர் திரு என்.விஸ்வநாதன் அவர்கள் செயலமர்வு மற்றும் 20வது தேசிய கருத்தரங்கம் குறித்து விளக்கினார்.

இயற்கை வள மேலாண்மை இயக்ககத்தின் இயக்குனர் முனைவர் ப. பாலசுப்ரமணியம், வேளாண்மை முதன்மையர் முனைவர் ந.வெங்கடேச பழனிச்சாமி, பாபா அணு ஆராய்ச்சி மையம், மும்பை விஞ்ஞானி (ஓய்வு) திரு.எம்.சையது சஃபி, சென்னை ஆர்கிட் பார்மா முதுநிலை விஞ்ஞானி (ஓய்வு) ஏ.பெருமாள் ஆகியோர் பாராட்டு உரையாற்றினார். கோட்டயம் ரப்பர் ஆராய்ச்சி நிலைய முதுநிலை தொழில்நுட்ப அலுவலர் (ஓய்வு) திரு.சி.மாதேஸ்வரன் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

அதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட இரு தொழில்நுட்ப அமர்வில், இரு விருந்தினர் விரிவுரைகள் மற்றும் ஆறு தொழில்நுட்பக் கட்டுரைகளை, பெங்களுரு ராமன் ஆராய்ச்சி நிறுவனம், ஹைதராபாத் பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட், மும்பை பாபா அணு ஆராய்ச்சி மையம், சென்னை ஆர்க்கிட் பார்மா, இந்தூர் ராஜாரமனா நிறுவனம், கோட்டயம் ரப்பர் ஆராய்ச்சி மையம், கோவை காருண்யா பல்கலைக்கழகம், திண்டுக்கல் காந்தி கிராம பல்கலைக்கழகம் ஆகிய பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த வல்லுநர்கள் விவாதித்தனர்.

மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற நிறைவு விழாவில், கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மண்ணியல் மற்றும் வேளாண் வேதியில் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் அர.சாந்தி அவர்கள் வரவேற்புரையும், இயற்கை வள மேம்பாட்டு இயக்ககத்தின் இயக்குநர் முனைவர் ப.பாலசுப்பிரமணியம், அவர்கள் தலைமையுரையும் ஆற்றினர். முனைவர் என்.வெங்டேசபழனிச்சாமி முதன்மையர் (வேளாண்மை) அவர்கள் நிறைவுரையாற்றி, 21ம் தேதி நடைபெற்ற கண்ணாடி வடிவமைப்பு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளையும், வாழ்நாள் சாதனையாளர் விருதுகளையும் வழங்கினார். மண்ணியல் மற்றும் வேளாண் வேதியில் துறை பேராசிரியை முனைவர் து.செல்வி, அவர்கள் இரண்டு நாட்களாக நடந்த தேசிய கருத்தரங்கத்தில் நடைபெற்ற செயலாக்கங்களை விவரித்தார். இந்திய அறிவியல் கண்ணாடி வடிமைப்பாளார்கள் சங்கத்தின் செயலாளர் என்.குஞ்சிதபாதம் நன்றியுரையாற்றினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**